# க்ளென்சியாவுடன்கொலோனோஸ்கோபி பற்றிய நோயாளியின் தகவல்

SPLIT-DOSE




நோயாளியின் பெயர்

உங்கள் பரிசோதனை தேதி மற்றும் நாள்

**மேற்கொள்ளப்படும் பரிசோதனைக்கு குடலை சுத்தப்படுத்தும் செயலாக க்ளென்சியா செயல்பாட்டை உங்கள் மருத்துவர் பரிந்துரைத்திருக்கிறார்.**

ஒரு பாக்கெட் க்ளென்சியாவில் 4 பெரிய மற்றும் 4 சிறிய பைகள் இருக்கும். க்ளென்சியாவின் எலுமிச்சை நறுமணம் எடுத்துக்கொள்ள இனிமையாக இருக்கும். உங்கள் குடல் முழுமையாக சுத்தம் செய்யப்பட்டு பரிசோதனைக்கு தயாராக இருப்பதை உறுதி செய்வதற்கு பின்வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றவும்.

**குறைந்தபட்சம் பரிசோதனைக்கு 3 நாட்களுக்கு முன்னர், கீழே பட்டியலிடப்பட்டிருக்கும் நார்ச்சத்து குறைவான உணவுகளை எடுத்துக்கொள்ளவும்:**

- உலர்ந்த பிஸ்கட்கள் அல்லது ரஸ்க்களை (முழு தானியம் அல்லாதவை) வெண்ணை அல்லது செயற்கை வெண்ணெய் உடன்.
- ஜெல்லி, தேன் அல்லது ஜாம் (விதைகள் அல்லாமல்).
- கொழுப்பற்ற இறைச்சி (மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, இறைச்சி துண்டுகள், கோழி, கன்றிறைச்சி, முயல், வான்கோழி நெஞ்சுப்பகுதி, வேகவைத்த பன்றித் தொடை) மீன் அல்லது முட்டைகள்.
- அரிசி, பாஸ்தா (முழு தானியம் அல்லாதவை) அல்லது கூஸ்கஸ்
- வெண்ணை அல்லது செயற்கை வெண்ணெய் உடன்.
- சூப் (காய்கறிகள் மட்டும்).
- தண்ணீர், சர்க்கரை உடன் காபி அல்லது தேநீர் (பால் அல்லது கிரீம் கலக்காமல்).

**குறிப்பு:** சாலட்கள், பயறு வகைகள் அல்லது பழங்கள் (வாழைப்பழம் தவிர) அல்லது காய்கறிகள் (தோலுரிக்கப்பட்ட மற்றும் வேகவைத்த கேரட் தவிர) சாப்பிடக்கூடாது.

தேதி / மருத்துவரின் முத்திரை

கேள்விகள் இருந்தால், பாக்கெட்டில் இருக்கும் கையேட்டைப் படிக்கவும் மற்றும் உங்கள் மருத்துவர் அல்லது மருந்துக் கடைக்காரரிடம் ஆலோசனை செய்யவும்.

# க்ளென்சியாவை தயாரிப்பது மற்றும் எடுத்துக்கொள்வது

## க்ளென்சியாவை எப்படி தயாரிப்பது

1l = க்ளென்சியா கலவை ½l = தெளிவான திரவம்

### முதல் மருந்து அளவு




### இரண்டாவது மருந்து அளவு




- 2 **பெரிய பைகள் மற்றும்** 2 சிறிய பைகளை 1 l தண்ணீரில் கலக்கவும்.
- **ஒவ்வொரு 1 l க்ளென்சியா மருந்து** அளவிற்கும் **குறைந்தபட்சம் ½ l** தண்ணீர் அல்லது தேநீர் (பால் கலக்காதது) போன்ற தெளிவான திரவத்தை தயாரிக்கவும்.

## க்ளென்சியாவை எப்படி எடுத்துக்கொள்வது?

**க்ளென்சியாவை எடுத்துக்கொள்ள ஆரம்பித்தவுடன் திட உணவுகள் எதையும் எடுத்துக்கொள்ள வேண்டாம்.**

**பரிசோதனைக்கு 2 மணி நேரத்திற்கு முன் எதையும் குடிக்க வேண்டாம்.**




முதல் மருந்து அளவின் நேரம்

இரண்டாவது மருந்து அளவின் நேரம்

கொலோனோஸ்கோபி பரிசோதனை நேரத்தில்

- 15 முதல் **20 நிமிடத்திற்கு ஒரு முறை 250 ml க்ளென்சியா கலவையைக்** குடிக்கவும்.
- **ஒவ்வொரு லிட்டர் க்ளென்சியா கலவையைக் குடித்தப் பிறகு, ஒருமுறை ½ l தண்ணீர் போன்ற தெளிவான திரவத்தைக் குடிக்கவும்.**
- கொலோனோஸ்கோபி பரிசோதனைக்கு 2 மணி நேரங்களுக்கு **முன் எந்த திரவத்தையும்** (குடல் சுத்தம் செய்யும் கலவைகள் உட்பட) **குடிக்கக்கூடாது.**

SPLIT-DOSE

CLN1FLYI0322ta

அன்புடன் நிதியுதவி அளிப்பவர்கள்:
Alfasigma Schweiz AG | Luzernerstrasse 2 | CH-4800 Zofingen

ALFASIGMA